<u>செய்தி வெளியீடு எண்.612</u> <u>நாள்.26.9.2007</u>

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் தமிழக அமைச்சரவையின் இருபத்திரெண்டாம் கூட்டம் இன்று நடைபெற்றது. அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் பின்வருமாறு :

அமைச்சரவைக் குழு விரிவாக ஆய்வு செய்த புதிய தொழில் கொள்கையை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய தமிழகத்தின் இரண்டாம் நிலை பெருநகரங்களில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்கிட ஹெச்.சி.எல். டெக்னாலஜி, அனிவெல் இன்டர்நேஷனல் இந்தியா சர்வீசஸ், டெசால்வ் சர்வீசஸ், எஸ்.ஜி.டி. இந்தியா, சத்யம் கம்யூட்டர் சர்வீசஸ், ஸதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ், காக்னிசெண்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ், ஜீனித் சாப்ட்வேர் போன்ற முன்னணி நிறுவனங்களுக்கு தமிழக அரசு நிறுவனமான “எல்காட்” மூலமாக நிலம் ஒதுக்கீடு செய்திடத் தீர்மானிக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம்–சோழிங்கநல்லூர் “எல்காட்” சிறப்புப் பொருளாதார மண்டல தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் சிஃபி லிமிடெட், ஸதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ், காக்னிசெண்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ், ஸ்கோப் இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 90 ஆண்டு குத்தகைக்கு நிலம் ஒதுக்கீடு செய்திடத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்தொகை மற்றும் வட்டித் தொகை 31.3.2007 அன்றைய நிலையில் மொத்தம் 787 கோடியே 42 இலட்சம் ரூபாய் ஆகும். இந்த தொகை நகராட்சி மன்றங்களுக்கு மிகப்பெரிய நிதிச் சுமையாக அமைந்து, வளர்ச்சிப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு இடையூறாக இருப்பதால் அந்தத் தொகை முழுவதையும் தள்ளுபடி செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

தமிழகத்தின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் உள்ள அனுமதியற்ற காலிமனைப் பிரிவுகளை முறைப்படுத்தும் திட்டத்தை சென்ற ஆண்டு தி.மு.க. அரசு அறிமுகப்படுத்தியது. பொதுமக்களுக்கு மிகுந்த பயனை அளித்துள்ளதால், 31.12.2006 அன்றுடன் நிறைவு பெற்றுள்ள இத்திட்டத்தின் கால அவகாசத்தை 31.12.2007 வரை நீட்டிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம், திருச்சி–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் செண்டூர் சந்திப்புக்கு அருகே 7.4.2007 அன்று ஏற்பட்ட வெடிவிபத்து குறித்து மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியும், வருவாய் நிருவாக ஆணையாளருமான திரு.ஃபாரூக்கி விரிவாக விசாரணை செய்து, அரசுக்கு அளித்துள்ள அறிக்கையையும், பரிந்துரைகளையும் அப்படியே ஏற்றுக் கொண்டு செயல்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

*****

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.